**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

**CC. No: 403/2022** Date: 23.07.2026

**Prosecution Witness**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | **PW : 12** |
| Name | : | D.அம்மாதுரை, காவல் ஆய்வாளர் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Age | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 23.07.2026.

**முதல் விசாரணை**

1. நான் திருப்பூர் மாவட்டம், உதவி ஆணையராக பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்றுவிட்டேன். இவ்வழக்கில் முதற்கட்ட புலன் விசாரணை மேற்கொண்ட உதவி ஆய்வாளர் திருமதி. D. விஜயா வழக்கு கோப்பினை என் பார்வைக்கு வைத்தததை நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு உதவி ஆய்வாளர் விசாரித்த சாட்சிகளை நான் விசாரித்தபோது அவரிடம் கூறியதுபோலவே என்னிடமும் கூறியதால் மறுவாக்குமூலம் எதுவும் பதிவுசெய்யவில்லை. கடந்த 06.01.2022 ம் தேதி கோகுல்ராஜ் என்பவருக்கு சிகிச்சையளித்த தருமபுரி அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.கிருஷ்ணகுமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்து விபத்துபதிவேட்டுடன் கூடிய காயச்சான்று பெற்றேன். **கோகுல்ராஜ் என்பவரின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.12 ஆகும்.** கோகுல்ராஜாவிற்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என மருத்துவர் சான்று வழங்கினார். வழக்கு சம்பவத்தின்போது சேதமடைந்த Laptop யை ஆய்வுசெய்து மதிப்பீடு சான்று வழங்கிய சாட்சி பெரியசாமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்து, சேதமதிப்பீடு சான்று பெற்றேன். **சேதமதிப்பீட்டு சான்று அ.சா.ஆ.13 ஆகும்.** உடைந்துபோன ஜன்னல் கண்ணாடிகளை மதிப்பீடு செய்து சான்று வழங்கிய சாட்சி நரசிம்மன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்து சேதமதிப்பீடு சான்று பெற்றேன். சேதமடைந்த செல்போனை மதிப்பீடுசெய்த சாட்சி கார்த்திக் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். சேதமடைந்த இருசக்கர வாகனத்தை ஆய்வுசெய்து மதிப்பீடுசெய்து சான்று வழங்கிய ராஜா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்து, சான்று பெற்றேன். வழக்கில் காயம்பட்ட சாட்சி

கோகுல்ராஜிற்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என மருத்துவர் சான்று வழங்கியதால் வழக்கின் சட்டப்பிரிவை 147, 448, 447, 427, 294(b), 323, 324, 506(2) இதசவிலிருந்து 147, 448, 447, 427, 294(b), 323, 324, 506(2), 148, 326 இதசவாக சட்டப்பிரிவு மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சாஆ. 14 ஆகும்.** வழக்கில் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது 06.01.2022 ம் தேதி 147, 448, 447, 427, 294(b), 323, 324, 506(2), 148, 326 இதசவின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

1. இவ்வழக்கு சம்பவத்திற்கு முன்னதாக காலை 8.30 மணிக்கு ஒரு சம்பவம் நடந்தது என்றால் சரிதான். எனது விசாரணையில் சாட்சிகள் கௌரி, செல்வம் ஆகியோர் காலை 9.00 மணி மற்றும் காலை 10.30 மணிக்கு நடந்த சம்பவத்தில் உடனிருந்ததாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் புகார் வாக்குமூலம் பதிவுசெய்ததாக சொல்லப்படும் சுந்தரராஜன் என்பவரை நான் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல, விசாரித்தேன், சாட்சியாக காண்பிக்கவில்லை. வழக்கு சொத்துக்கள் சம்பவ இடத்தில் கைப்பற்றி காவல்நிலையம் கொண்டுவரப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு வழக்கு சொத்துக்களை காவல் நிலையத்திற்கு எடுத்துவந்த காவலரை சாட்சியாக நான் விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

2. கோகுல்ராஜிற்கு சுண்டுவிரலில் ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என நான் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்துள்ள பட்சத்தில் உதவி ஆய்வாளரால் பதிவுசெய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையில் கோகுல்ராஜிற்கு அவ்வாறான காயம் ஏற்பட்டதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கைக்கு பின்னிட்டு மறுவாக்குமூலம் பதிவுசெய்யவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் எதிரிடை வழக்கான குற்ற எண். 305/2021 ல் வழக்கு Refer செய்யப்பட்டுள்து என்றால் சரிதான். குற்ற எண். 305/2021 வழக்கில் செல்வம் மற்றும் கௌரி காலை 10.30 மணிக்கு நடந்த சம்பவத்தின்போது உடனிருந்ததாக சொல்லவில்லை என்றால் சரியல்ல, நேரம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றும், 2 வது சம்பவம் குறித்து அந்த இடத்தில் இருந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

3. இவ்வழக்கின் 6 ம் எதிரி வேடியம்மாள், 1 ம் எதிரி சின்னசாமியின் மனைவி என்றால் சரிதான். சுரேஷ் மற்றும் சக்திவேல் சம்பவத்தின்போது செல்போனை பிடுங்க சென்றபோது அவர்கீழே விழுந்து காயம் ஏற்படுத்திக்கொண்டார் என்று எனது விசாரணையில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் குற்ற எண். 305 ல் குறிப்பிட்டுள்ள சம்பவம் தொடர்ச்சியாக நடக்கவில்லை என்றும், காலை 9.00 மணிக்கு ஒரு சம்பவமும் அதை தொடர்ந்து காலை 10.30 மணிக்கு நடந்தது என்றால் சரியல்ல. வீட்டிற்குள் சம்பவம் நடத்திருந்தால் உடைந்துபோன ஜன்னல் கண்ணாடி துண்டுகள் வீட்டின் வெளியே தான் கிடைத்திருக்கும் என்றும், அது வரைபடத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. எலும்புமுறிவு நிபுணத்துவ மருத்துவரை நான் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். காயம்பட்ட நபருக்கு எடுக்கப்பட்ட Xray

பதிவை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

4. குற்ற எண் 305/21 ல் வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக அ.சா.1 ஆல் கொடுக்கப்பட்ட பொய்யான புகாரின் அடிப்படையில் வழக்காவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் எதிரிகளுக்கு எதிராக ஜோடிக்கப்பட்ட பொய்யான ஆவணங்கள் என்றால் சரியல்ல. எதிரி கொடுத்த குற்ற எண். 305/21 ல் வழக்கில் காயம்பட்ட நபர்கள் சிகிச்சைக்கு சேர்ந்த விபரம் தெரிந்து பின் யோசனையின் பேரில் அ.சா.1 மருத்துவனையில் சிகிச்சைக்கு சேர்ந்தார் என்றால் சரியல்ல. புகாரில் சொன்ன விபரத்திற்கு ஏற்ப மருத்துவர் சான்று வழங்கியுள்ளார் என்றும், நான் ஒருதலைபட்சமாக எதிரிகள்மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

5. நான் சொல்வதுபோல் வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றும், வழக்காவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் குற்ற எண். 305/2021 ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள Referred charge sheet என்னால் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். **அது எ.சா.ஆ.1 ஆகும்.**

**மறுவிசாரணை – இல்லை.**

TAMIL ARASU A

Digitally signed by TAMIL ARASU A
Date: 2026.07.23 16:18:45 +0530